மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு ஜூலை திங்கள் 13ம் நாள் புதன்கிழமை

இ.ம.எண்.01/2022
உள்
அசல் வழக்கு எண்.62/2021
-------------

ஜி.முருகன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. குட்டி (எ) குருசாமி

2. சார்பதிவாளர், சாத்தூர்
3. மாவட்ட ஆட்சியர் விருதுநகர் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 01.06.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 06.07.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஜெகதீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.வாசவன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/ 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் அரசுப்பணிகள் வழக்கறிஞர் திரு.கே.குமரவேல் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிர்உரைகளை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் 151 சிபிசி-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், பிராதில் 8வது பக்கத்தில் "ஆ" பரிகாரத்தில் 4வது வரியில் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2872/1982 என்பதை நீக்கம் செய்துவிட்டு 2897/1982

என்று சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்து தாவா வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 01.06.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2). மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-**

1வது பிரதிவாதி அனுப்பிய பதில் அறிவிப்பில் தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்து 1வது பிரதிவாதி தந்தைக்கு பாத்தியப்பட்டது என்றும், அவரது இறப்பிற்கு பின்னர் அவரது ஆண் வாரிசுதாரர்களான திரு.குருசாமி, கெங்கா நாயக்கர், குருசாமி நாயக்கர், சுப்புராஜ், வேல்ச்சாமி ஆகிய ஐவரும் கடந்த 24.11.1982ம் தேதி சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2897/1982 வாயிலாக தங்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்படுத்திக் கொண்டனர் என்றும், மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின்படி தபசில் கண்ட சொத்தான 1வது அயிட்ட சொத்து இ செட்யூலில் பாகமாக 1வது பிரதிவாதிக்கு கிடைத்துள்ளது என்று பதிலறிவிப்பில் 1வது பிரதிவாதி கூறியுள்ளார். இதில் எவ்வித ஆவணமும், எவ்வித பாத்தியமும், ஆதராமும் இல்லாமல் சட்டப்படி உரிமையும் இல்லாத தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை இ செட்யூல் சொத்தாக உள்ளடக்கி 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை செய்து செகாண்ட பாக விஸ்திப்பத்திரம் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2897/1982 பதிவு செய்யப்பட்ட பதிவுகளை நீக்கரவு செய்ய செயலுறுத்துக்கட்டளை பிறப்பிக்கக்கோரியும் நீதிமன்றத்தில் பிராது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிராதில் குறிப்பிட்ட அனைத்து பக்கத்திலும் மற்றும் வாதி பக்கம் தஸ்தாவேசு விபரத்தில் 7வது ஆவணத்திலும் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2897/1982 என்று சரியாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் பிராது 8வது பக்கத்தில் "ஆ" பரிகாரத்தில் 4வது வரியில் மட்டும் தான் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவணம் எண்.2872/1982 என்று தவறாக சொல்லப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு 10.06.2022ம் தேதி விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது. அதில் மனுதாரர் பக்கம் நிரூபண அபிடவிட்டு தாக்கல் செய்ய பிராது காப்பியை பார்க்கும்போது, பிராது 8வது பக்கத்தில் "ஆ" பரிகாரத்தில் 4வது வரியில் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2897/1982

என்பதற்கு பதிலாக அலுவலக ஆவண எண்.2872/1982 என தவறாக கிளெர்க்கால் தவறு ஏற்பட்டுள்ளது என்பது தெரிய வந்துள்ளது. எனவே பிராது 8வது பக்கத்தில் "ஆ" பரிகாரத்தில் 4வது வரியில் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2872/1982 என பிராதை சீர்திருத்தம் செய்வது அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது. அவ்வாறு பிராதை சீர்திருத்தம் செய்யாவிடில் மனுதாரர்/வாதிக்கு கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும் என்று 01.06.2022ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-</u>**

மனுதாரர் பிராதில் தாக்கல் செய்துள்ள ஆவணம் எண்.2872/1982 நீக்கம் செய்துவிட்டு 2897/1982 என்று சீர்திருத்தம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளனர். மனுவில் ஆவணத்தின் தேதி எழுதிக் கொடுத்தவர், எழுதி வாங்கியவர் விபரம் சொத்து விபரம் தொகுதி மற்றும் பக்க எண் விபரங்கள் மனுவில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. மனுதாரர் மனுவில் ஆவணத்தை பற்றிய விபரங்கள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சீர்திருத்தம் செய்யும்போது ஆவணத்தின் பதிவு அடிப்படை விபரங்களை கூறாமல் சீர்திருத்தம் செய்வது சட்ட விரோதமாகும். வழக்கை பட்டியல் விசாரணையில் இருந்து நீக்க சட்டவிரோதமாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுவை எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>4). 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரை சுருக்கம்:-</u>**

அசல் வழக்கானது விசாரணைக்காக போடப்பட்டது. வழக்கு விசாரணையின் போது பிராதில் "ஆ" பரிகாரத்தில் ஆவண எண்.2897/1982 என்பதற்கு பதிலாக ஆவண எண்.2872/1982 தவறுதலாக டைப் செய்யப்பட்டுவிட்டதாக கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. அவற்றை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். அசல் வழக்கானது விசாரணையில்

உள்ளதால் தற்போது அசல் வழக்கில் சீர்திருத்தம் செய்யக்கோருவது ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. மனுதாரரின் மனுவை அனுமதிக்கும்பட்சத்தில் வாதிக்கு வழக்குமூலம் ஏற்படாது. எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை 2ம் எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

6). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

7). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>8). தீர்வு:-</u>

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரைகளும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. இந்த வழக்கும் கோப்புக்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே இத்தகைய சூழ்நிலையில் மனுதாரரால் பிராதில் 8வது பக்கத்தில் "ஆ" பரிகாரத்தில் 4வது வரியில் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2872/1982 என்பதை நீக்கம் செய்துவிட்டு 2897/1982 என்று சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்து தாவா வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 01.06.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும் நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். எனவே மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க

வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு பிராதில் 8வது பக்கத்தில் "ஆ" பரிகாரத்தில் 4வது வரியில் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2872/1982 என்பதை நீக்கம் செய்துவிட்டு 2897/1982 என்று சேர்த்து பிராதை சீர்திருத்தம் செய்து தாவா வழக்கினை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 01.06.2022ம் தேதி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஜூலை திங்கள் 13ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.